சுருக்கம்

பணியமைப்பு – கருவூலக் கணக்குத் துறை – திருமதி.M.கவிதா, இளநிலை உதவியாளர், திருச்சி மாவட்டக் கருவூல அலகு – கருணை அடிப்படையில் 24.12.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

நிதி (கருவூலக் கணக்கு – 2)த் துறை

அரசாணை (3ப) எண்.68

நாள். 01.11.2023
சோபகிருது, ஐப்பசி–15,
திருவள்ளுவர் ஆண்டு –2054,

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.18, தொ.(ம).வே.வா.(க்யூ1)த் துறை, நாள் 23.01.2020.
2. திருச்சி மாவட்ட கருவூல அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.7087/2021/ஆ2, நாள்.24.12.2021.
3. கருவூல கணக்கு ஆணையரின் கடித ந.க.எண். 32422/2022/சி1, நாள்.23.01.2023.

*******

**ஆணை:**

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கருவூலக் கணக்கு ஆணையரின் கடிதத்தில், திருச்சி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் உதவி கணக்கு அலுவலராக பணிபுரிந்து வந்த திரு.J.சுரேஷ்பாபு என்பவர் 17.03.2020 அன்று பணியிலிருக்கும் போது பணியிடை மரணமடைந்ததைத் தொடர்ந்து, அவரது வாரிசுதாரர் மற்றும் மனைவி திருமதி.M.கவிதா என்பவர் கருணை அடிப்படையில் கருவூல மற்றும் கணக்குத் துறையில் திருச்சி மாவட்டக் கருவூல அலகில் பணியமர்த்தப்பட்டு, 24.12.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார் என்றும், இடைநிலைக் கல்வி பள்ளி இறுதி வகுப்பில் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், பணியேற்பு செய்த நாளில் அரசால் நிர்ணயிக்கப்பட்ட வயதினை நிறைவு செய்துள்ளார் என்றும், இறந்த அரசு ஊழியரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்றும், தனியரின் குடும்பத்தில் எவரும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியவில்லை என்பதற்கான சான்றிதழினை அளித்துள்ளார் என்றும், தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் பெறுவதற்கான தகுதியை தனியர் பெற்றுள்ளார் என்றும், தெரிவித்து அவரது பணியினை 24.12.2021 முற்பகல் முதல் இளநிலை

//த.பி.பா//

உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசினைக் கோரியுள்ளார்.

2. மேலே, இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல் முறை ஆணையில் திருமதி.M.கவிதா, (காலஞ்சென்ற திரு.J.சுரேஷ்பாபு, உதவி கணக்கு அலுவலர் என்பவரின் வாரிசுதாரர் மற்றும் மனைவி) என்பவர் கருணை அடிப்படையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ல் பிரிவு 17-ன் உட்பிரிவு (1)-ன்படி தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டார். மேலும் அச்செயல்முறை ஆணையின்படி தனியர், மாவட்ட கருவூலம், திருச்சி மாவட்டக் கருவூல அலகில் இளநிலை உதவியாளராக 24.12.2021 முற்பகல் முதல் தற்காலிகமாக பணிபுரிந்து வருகிறார். அவரது பணியினை 24.12.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசினைக் கோரியுள்ளார்.

3. கருவூலக் கணக்கு ஆணையரின் கருத்துருவினை உரிய ஆவணங்களுடன் அரசு கவனமுடன் பரிசீலித்து, இளநிலை உதவியாளர் பணியிடத்தில் ஓராண்டிற்கு மேலாகப் பணிபுரிந்து வரும் திருமதி.M.கவிதா என்பவரின் தற்காலிகப் பணிநியமனமானது, இளநிலை உதவியாளர் பதவியில் திருப்தி அளிக்கும் படியாக உள்ளதாலும், கருணை அடிப்படையிலான நியமனத்திற்குரிய அனைத்துத் தகுதிகளையும் தனியர் நிறைவு செய்துள்ளதாலும், திருமதி.M.கவிதா, இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை தனியர் பணியேற்ற நாளான 24.12.2021 முற்பகல் முதல் அவர் அப்பதவிக்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைகுட்பட்டு வரன்முறைப்படுத்தி அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் ஆண்டு ஊதிய உயர்வு / ஊதிய நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் தனியர் அவற்றினைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார். மேலும் தனியர் பொருட்டு தமிழ்நாடு கருவூலக் கணக்குத் துறை பணிவிதிகளின்படி அன்னாருக்கு தகுதிகாண்பருவம் துவங்குதல் மற்றும் வரையறுக்கப்பட்ட தேர்வுகள் மற்றும் பயிற்சிகள் ஏதும் இருப்பின் அது குறித்து தக்க செயல்முறை ஆணை கருவூலக் கணக்கு ஆணையரால் வெளியிடப்பட வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது .

(ஆளுநரின் ஆணைப்படி)

த. உதயச்சந்திரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

திருமதி.M.கவிதா, இளநிலை உதவியாளர், திருச்சி மாவட்டக் கருவூல அலகு, திருச்சி மாவட்டம், (பணிப்பதிவேடு மற்றும் அனைத்து மூலச்சான்றிதழ்கள்) (துறைத் தலைவர் வழியாக)

மாவட்ட கருவூல அலுவலர், திருச்சி.
மண்டல இணை இயக்குநர், திருச்சி.

**<u>நகல்</u>**
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

பிரிவு அலுவலர்

I/45054/2023

**கருவூலக்கணக்கு ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**
**தமிழ்நாடு,சென்னை-35.**
*****************
**முன்னிலை: திரு.க.விஜயேந்திரபாண்டியன், இ.ஆ.ப**

செ.மு.ந.க.எண்.32422/சி1/2022 நாள். 11.2023

**பொருள்:** பணியமைப்பு-கருவூலக்கணக்குத்துறை-திருமதி.M.கவிதா,,இளநிலை உதவியாளர், திருச்சி மாவட்ட கருவூல அலகு-கருணை அடிப்படையில் பணிநியமனம்- பணிவரன்முறை ஆணைகள்

**பார்வை:**
1. கருவூல அலுவலர், திருச்சி அவர்களின் கடித ந.க. எண். 7087/2021/ஆ2, நாள்.24.12.2021
2. கருவூல அலுவலர், திருச்சி அவர்களின் கடித ந.க. எண். 7087/2021/ஆ2, நாள்.01.08.2022
3. கருவூலக்கணக்கு ஆணையரக கடித ந.க. எண் 32422/ சி1/2022 நாள் 23.01.2023
4. அரசாணை(3ப)எண்.68,நிதி (க.க.-2) த்துறை நாள்.01.11.2023

***************

**ஆணை:**

திருச்சி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் உதவிகணக்கு அலுவலராகப் பணியாற்றிய திரு.J.சுரேஷ் பாபு அவர்கள் 17.03.2020 அன்று பணியிலிருக்கும்போது மரணமடைந்ததைத் தொடர்ந்து, அவரது வாரிசுதாரரும் மனைவியுமாகிய திருமதி.M.கவிதா அவர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டு பார்வை-1ல் காணும் செயல்முறை ஆணைப்படி 24.12.2021 முற்பகல் முதல் திருச்சி மாவட்ட கருவூல அலகில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார்.

பார்வை-4-இல் காணும் அரசாணையில், பார்வை-1-இல் காணும் செயல்முறை ஆணைப்படி கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.M.கவிதா (J.சுரேஷ் பாபு,உதவி கணக்கு அலுவலர், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலஅலுவலகம், திருச்சிஎன்பவரின் மனைவி) கருணை அடிப்படையில், தற்காலிகமாக இளநிலை உதவியாளராக 24.12.2021 முற்பகல் முதல் பணிபுரிந்து வருபவரின் பணிநியமனம் இளநிலை உதவியாளர் பதவியில் திருப்தி அளிக்கும் படியாக உள்ளதாலும், அப்பதவிக்குரிய மற்றும் கருணை அடிப்படையிலான நியமனத்திற்குரிய அனைத்து தகுதிகளையும் தனியர் நிறைவு செய்துள்ளதாலும், திருமதி.M.கவிதா இளநிலை உதவியாளரின் பணியினை தனியர் பணியேற்ற நாளான 24.12.2021 முற்பகல் முதல், அப்பதவிக்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறைப்படுத்தி அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை வரன்முறைப்படுத்தி செய்யப்படுவதன் மூலம் ஊதிய உயர்வு / ஊதிய நிலுவைத்தொகை ஏதுமிருப்பின் தனியர் அவற்றை பெற தகுதியுடையவராகிறார்.

இவ்வாறு, தனியரின் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்பட்டதை தொடர்ந்து,தமிழ்நாடுகருவூலக்கணக்குத்துறை விதிகளின்படி, பணிவரன்முறை நாளான 24.12.2021 முதல் தகுதிகாண்பருவம் துவங்கி ஆணையிடப்படுகிறது. மேலும் தகுதிகாண்பருவம் துவங்கப்பட்டு மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தினராக கருதப்படுவார். தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் காலத்திற்குள் தேர்ச்சி பெற வேண்டிய தேர்வுகள் மற்றும் பயிற்சிகள் ஏதேனும் இருப்பின் அதனை நிறைவு செய்ய வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

**கருவூலக் கணக்கு ஆணையர்.**

I/45054/2023

**பெறுநர்**

1. திருமதி.M.கவிதா,
   இளநிலை உதவியாளர்,
   மாவட்டக்கருவூலம், திருச்சி
   திருச்சி மாவட்டக்கருவூல அலகு.
   (உரிய வழிமுறையாக)
2. கருவூல அலுவலர்,
   மாவட்டக்கருவூலம்
   திருச்சி

3.இருப்புக்கோப்பு/ உதிரி